Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்ருங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி௵ ஆனி௴ ௧௧௨ (25-6-39) { இல. 34

## சர்வகலாசாலையும் ஆராய்ச்சியும்

பிறின்ஸ்ரன் சர்வகலாசாலைப் பேராசிரியராகிய திரு. W. T. ஸ்ரேஸ் கொழும்பு ஆகாயவசனியில் இலங்கைச் சர்வகலாசாலை எவ்வகையில் வளரவேண்டுமென்னும் விஷயமாக ஓர் அரிய சொற்பொழிவை நிகழ்த்தியுள்ளார். ஏற்ற இடத்தில் அழகிய கட்டிடங்களை அமைப்பதோடு சர்வகலாசாலை பூரணமடையாது என்பது அவர் கருத்தாகும். சர்வகலாசாலையின் பெருமை சர்வகலாசாலையில் கல்வி கற்பிப்பதற்காக ஏற்படுத்தப்படும் ஆசிரியர்களின் பெருமையிலேயே தங்கிநிற்கிறது. ஆசிரியர்கள் தக்க கல்வியும், ஆராயுந் திறனும் பொருந்தியவர்களாகவிருப்பது அவசியமாகும். வெளிச்சோடினைகளிலே மயங்கியிருக்கும் இலங்கைக் கல்வியதிகாரிகளுக்கு இச்சொற்பொழிவு அறிவு புகட்டக்கூடிய தொன்ருகும். கல்விப் பெருமையே உண்மைப் பெருமை என்பதை ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் ஆசிரியர்கள் மாணைக்கர்களுக்கு நன்கு புகட்டவேண்டும். வெளித்தோற்றங்களில் இலங்கை யதிகாரிகள் மயங்கியிருந்தமையும் இலங்கைச் சர்வகலாசாலை சென்ற நாற்பது வருடங்களாக அமைக்கப்படாததற்குக் காரணமாகும். இலங்கைச் சர்வகலாசாலையைப் பற்றி ஆலோசிக்கத் தொடங்கியபின்னர் இந்தியாவில் ஐந்து, ஆறு சர்வகலாசாலைகள் தாபிக்கப்பெற்றன. இலங்கையில் இன்னும் இவ்வளவு தாமசம் இருப்பதற்குக் காரணம் தெரியவில்லை.

### ஆங்கில கலாசாலைகளில் சுவபாஷா ஆசிரியர்கள்

சில காலமாக ஆங்கில கலாசாலைகளில் கற்பிக்கும் தமிழ் சிங்கள ஆசிரியர்கள் சராசரிக்குள் இருக்கவேண்டுமென்ற கட்டுப்பாடு இருந்து வருகிறது. இக்கட்டுப்பாடு ஆங்கிலக் கல்லூரிகளில் சுவபாஷைக் கல்வியை மிகக் கேவலமான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. ஆங்கில ஆசிரியர்களுக்குப் போதிய சுவபாஷா அறிவு இன்மையால் மாணவர் சுவபாஷா அறிவைப் போதியளவு பெருமற்போகின்றனர். இக்குறையை நிவிர்த்திபண்ணும் நோக்கமாக இவ்விஷயம் கல்வி மந்திரிசபையில் சமீபத்தில் ஆலோசிக்கப்படுமாம். ஆங்கில கலாசாலைகளில் தக்க உபாத்தியாயர்களை நியமித்து சுவபாஷா கலைகளைக் கற்பிக்க அரசினர் உதவிசெய்ய முன்வருவார்களாக.

### கல்வியதிகாரசபை

கொழும்பு ஆசிரியர் சங்கம் கல்வியதிகாரசபை ஏற்படுத்தப்பட வேண்டுமென்று திரும்பவும் கிளர்ச்சி செய்கிறது. கல்வியதிகாரிகள் அதிகாரசபை ஒன்றை ஏற்படுத்துவார்களா? இவ்வளவு காலமும் ஏற்படுத்தாம லிருப்பதற்குக்

(தொடர்ச்சி 269-ம் பக்கம் பார்க்க)

# இடப் பூமிசாஸ்திரம் படிப்பித்தல்

## பாடத்திட்டம்

(6-ம், 7-ம், J. S, C; S. S. C; வகுப்புகளுக்குரியது)

[ திரு. K. கணபதிப்பிள்ளை அவர்கள் ]

### I

### சரித்திரம்

1. ஆராய்ச்சி செய்யப்போகும் பகுதியின் தரைவிவரப் படத்தை ஓர் பழைய படத்திலிருந்து பிரதி செய்து கொள்க. பழைய படத்திற்கும்தற்போது இருக்கும் தரை விவரத்திற்கும் ஏதும் வேற்றுமை உண்டோ? வேற்றுமைகளுண்டேல், அவைகள் எங்ஙனம், எப்போது, ஏற்பட்டன? காடடர்ந்திருந்ததரை நாடாக்கப்பட்டது; வயல் நிலங்கள், புலங்கள், புற்றரைகள், குடியிருப்பு இடங்கள், புதிதாக ஆக்கப்பட்டது; எப்போது? எவரால்? எங்ஙனம்?

2. பகுதியின் சிறப்பியல்பை விவரிக்குக:- ஆக்கத்தொழில் பட்டணம், விற்பனை இடம், தற்காலக் குடியிருப்புப் பட்டணம், குடியிருப்பு, பழைய கிராமம், சிவஸ்தல ஸ்தானம், யாத்திரை ஸ்தலம், விவசாயக் கிராமம், துறைமுகம், புகைரதச் சந்தி, ஆற்றங்கரை விடுதி, பாலத்தருகாமைப் பட்டணம், மீன் பிடிக் கிராமம், என விவரிக்குக.

3. பகுதியின் சரித்திர ஆராய்ச்சிக்கு ஏதுக்களாயுள்ள சாதனங்களாகிய, கோயில்கள், கோட்டைகள், சவக்காலைகள், கல்வெட்டுகள்—இவைகளைப் படத்தில் அடையாளப்படுத்துக. இவைகளைக் கட்டியவர்கள் காலம், இவைகள் கட்டப்பட்ட காலம், அக்காலச் சனசமூக வாழ்க்கைநிலை—இவைகளைப்பற்றிய ஆராய்ச்சிகள் செய்க.

4. சரித்திர ஆராய்ச்சிக்கு ஆதாரமாயுள்ள இடப்பெயர்கள், கட்டிடப் பெயர்கள், தெருப்பெயர்கள், ஆட்பெயர்கள்—இவைகளைக் குறிப்பிட்டு இவைகளைப்பற்றிய சரித்திர உண்மைகளை அறிக.

உலகப் பிரசித்திபெற்ற, அல்லது இடப் பிரசித்தி பெற்ற கனவான்கள் பெயர் ஏதாவது மேலே சொல்லப்பட்ட இடங்களோடு சம்மந்தப்பட்டிருந்தால் அக் கனவான்களின் சரித்திரத்தை யறிக.

5. பகுதியின் பண்டைக்கால ஆட்சி முறையைப் பற்றிய, சாதனங்களுண்டேல், அச் சாதனங்களை அடிப்படையாகக் கொண்டு, பகுதியின் பண்டைக்கால ஆட்சி முறை சம்பந்தமாக ஆராய்ச்சி செய்க!

6. பகுதி தற்கால தாரதரத்தை அடைவதற்கு ஏதுக்களாயிருந்தவைகளும், தற்போது அங்ஙனமிருந்துகொண்டு வருபவைகளுமாகிய காரணங்கள் யாவை?

7. பகுதியின் நிலையம், பேர் பாதைகள், புகையிரதப் பாதைகள், நீர் நிலைகள், விளைபொருட்கள்—இவைகளைக் காட்டும் ஓர் படம் வரைக.

### II

### பாறைப்போங்கும், மண்ணியல்பும்—பயிர்பச்சைகளும், பிராணிகள் செறிவும்

8. பகுதியிலுள்ள தரையின் இயல்பைப் பற்றி ஆராய்க. கற்பாறை, கப்பி, செம்மண், மணல், களிமண், சுண்ணமண், பெருக்கன் மண், பட்டிமண், கலப்பு மண், சதுப்பு நிலம், உவர் நிலம், சொறிக்கற்பாறை, கருங்கற் பாறை, மணற் பாறை இவைகளைப் பற்றி ஆராய்க.

பாறைகளினமைப்பைக் காட்டும், பூமிசாஸ்திரப் படம் ஒன்று வரைக. பாறைக் கற்றுண்டுகளைச் சேமித்து, அவைகளுக்குப் பெயரிட்டுப் பாடசாலை நூதனசாலையில் வைக்கவும்.

9. மேல் மண், கீழ் மண், இயல்பினது. பகுதியின் பலபாகங்களிலும் உள்ள மண்ணின் இயல்பைக் காண்பிக்கும் மாதிரி அளவுகளை (Samples) போத்தல்களிற் போட்டுப், பெயரிட்டு, நூதனசாலையில் வைக்கவும். வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு விதமான மண் காணப்படுவதற்குக் காரணங்கள் யாவை? தரையிலுள்ள "வன்னீர்" அல்லது "மென்னீர்" தரையின் இயல்பைக் காட்டும் சுரங்கங்கள், குழிகள், குன்றுகள்,—இவைகளைப் படத்தில் அடையாளப்படுத்துக.

10. விவசாயம், மந்தை மேய்த்தல், தோட்டச் செய்கை, இவைகளுக்குகந்த பண்ணையுடைய பரப்பை ஓர் படத்திற் காட்டுக.

11. பகுதியினுள் கடற்கரையுண்டேல் அதன் இயல்பு யாது? மணற் குவியல்கள், மணற் கரை, கற்பாறைகள், கூழாங்கற் கரை, கடற்கரைக் குன்றுகள்,—இவைகளுண்டோ? பகுதியுள் கடற்கரை இல்லாவிடில், அப் பகுதிக் கடற்கரையிலிருந்து எவ்வளவு தூரத்திலுள்ளது?

12. பகுதியிலுள்ள மிருகங்கள், பறவைகள், தாபரம், மீன், இவைகளைக்கொண்ட ஓர் படம் வரைக. இவைகள் சுயேச்சையாக வாழ்கின்றனவோ, அல்லது மனிதனால் வளர்த்துவரப்படுகின்றனவோ, என்பதையும்; உயர்ந்த தரை, பதிந்த தரை, ஆறு, குளம், கடல், கடற்கரை—இவைகளிற் சீவிக்கின்றனவோ என்பதையும் படத்தில் விபரிக்க.

13. துறைமுகங்கள் கரையேறு துறைகள், விபத்துக்கள் நேரக்கூடிய பாறை அடர்ந்த தரை,—இவைகளைப் படத்திற் காட்டுக.

முகத்துவாரம், கழிமுகம், (Estuary) விரிகுடா, குடாக்கள்—இவைகளையும் படத்திற் காட்டுக.

14. விளையாட்டிடங்கள், நந்தவனங்கள், கடலிற் குளிக்குமிடங்கள், பந்த ஓட்ட பிட்டிணிகள், முத்த வீதிகள், காடுகள், பள்ளத்தாக்குகள், — இவைகளெங்கு காணப்படுகின்றன? இவைகளை ஒருபடத்தில் அடையாளப்படுத்துக.

15. எவ்வித கற்களை அப்பகுதியார் உபயோகப் படுத்துகின்றனர்? கரிச் சுரங்கங்கள், கற்குழிகள், கூழாங் கற்குழிகள், மண் குழிகள், களிமண் குழிகள், சொறிக் கற்குழிகள், கப்பிக் குழிகள், காரீயச் சுரங்கங்கள், சுண்

உடம்பறியும் என்னும் அந்த ஊழெல்லாந் தீரத், திடம்பெறவே யெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ.

ணக் கற்சுரங்கங்கள்,—இவைகளை சரியான அடையாளக் குறிகளால் படத்திற் காட்டுக.

16. பகுதியிலுள்ள மரங்கள் யாவை? இவற்றுள் பயன்படும் மரங்கள் எவை? பயன்படாமரங்கள் எவை? பயன்படும் மரங்களைப் பகுதி வாசிகள் எவ்விதம் பிரயோசனப்படுத்துகிறார்கள்? முதிரை, பாலை, ருணை, வாகை, வீரை............இவைகள் என்ன பொருள் செய்வதற்கு உதவுகின்றன?

## III

### நில உயரம்—(நில அளவைப் படத்தைப் பரிசோதித்தல்)

17. நில அளவைப் படத்திலுள்ள சம உயரக் கோடுகளை நோக்குக. அவைகளுக்குச் சம உயரக் கோடென்ற பெயர் எங்ஙனம் பொருத்தமானது? சம உயரக் கோடுகளைக்கொண்ட ஓர் படம் வரைந்து அதில் 50 அடி அல்லது 100 அடி, அல்லது, 250 அடி உயரத்தைக் காட்டும் சம உயரக் கோடுகளைத் தடித்தவைகளாக்குக. அல்லது நிறம் தீட்டிவிளக்குக.

18. சம உயரக் கோடுகளை ஒவ்வொன்றாகத் தனித் தனிக் கடதாசி மட்டைகளில் வரைந்து, அம்மட்டைகளை ரேகைகளின் வழியே வெட்டி எடுத்து, ஒன்றின் மேலொன்றாக அடுக்கிப் பசைபோட்டு அவைகளை ஒட்டுக. இங்ஙனம் செய்வதால் நில உயரம் ஒருவாறு புலப்படும்.

19. பகுதியின் மிக உயர்ந்த பரப்பையும், மிகப் பதிந்த பரப்பையும் படத்தில் காட்டுக. தரை எத்தனை அடி உயர்ந்தது. அல்லது எத்தனை அடி பதிந்தது என்பதைக் குறிப்பிடுக. நில அளவைப் படத்திலுள்ள "மட்டக்குறி" "உயரக்குறி" முதலியவற்றைக் கவனிக்க.

20. பொதுப் பார்வைக்குப் பகுதி உயர்ந்ததாகக் காணப்படுகின்றதோ? அல்லது தாழ்ந்ததாகக் காணப்படுகின்றதோ?

தாழ்ந்த தரையைச் சுற்றிலும் உயர்ந்த தரை உண்டோ? பூரணமான நீர்வடிப்பு பரப்பு உண்டோ? நீர் வடிப்பு பரப்பின் ஒரு கூறுமாத்திரம் பகுதியில் அடக்கப்பட்டிருக்கின்றதோ? பகுதி மட்டமான உயர்ந்த தரையோ? பகுதி மட்டமான தாழ்ந்த தரையோ? பகுதி கரடுமுரடான தரையோ? பகுதியின் நில உயரத்தை விவரி. ஒருபடம் வரைந்து அதன்மூலம் பகுதியின் நில உயரத்தையும் அதன் வடிவத்தையும் விளக்குக.

21. மலைத் தொடர்களுக்கும் அல்லது உயர்ந்த தரைக்கும், தலக்காற்றுக்குமுள்ள சம்பந்தத்தையும், அச் சம்பந்தத்தின் காரணமாக விளையும் சுகாதிய வேறுபாடுகளையும் ஒரு படங்கொண்டு விளக்குக.

22. செங்குத்தான வாட்டம் (Steep gradient) பகுதியிற் தென்பட்டால் அது எங்கு தென்படுகிறது? சம உயரக் கோடுகளைக் கொண்டு சில சரிவுகளின் வாட்டங்களைக் கவனிக்க. பின், இச்சரிவுகளுக்குக் கால்நடையிற் சென்று அவைகளின்மேல் ஏறி அவைகளின் இயல்பை நோக்குக.

23 மலைகளின்மேற் செல்லும் பாதைகள், மலைகளைச்சுற்றிச் செல்லும் பாதைகள், பேர் பாதைகள், ஒற்றையடிப் பாதைகள், மலைநாட்டு வழி, அருவிவழி—இவைகளின் வழியே கால்நடையிற் சென்று அவைகளது உண்மை இயல்பை அவதானித்தறிவதோடு, அவைகளைப் படத்திலும் அவதானப்படுத்துக. பேர் பாதைகளும் புகையிரதப் பாதைகளும் தரை உயரத்தோடு எவ்வண்ணம் சம்பந்தப்பட்டிருக்கின்றன? பாதைகள் மலையடிவாரத்திற் செல்கின்றனவா? பள்ளத்தாக்குகளின்வழியே செல்கின்றனவா? கணவாய்களின் வழியே மலைகளை ஊடறுத்துச் செல்கின்றனவா? சமதரை மார்க்கமாகச் செல்கின்றனவா? இவைகளை நோக்குக.

## IV

### நீர்வழிகளும், நீர்பெறு முறைகளும்

24. வாவிகள், ஆறுகள், அருவிகள், வாய்க்கால்கள்—இவைகளை ஒரு படத்திற் காட்டுக. இவைகள் மனிதருக்கு எவ்விதங்களில் உபயோகப்படுகின்றன என்பதை நோக்குக.

(உ-ம்) வீட்டுபயோகத்திற்கு உதவுகின்ற நீர்நிலையங்கள், மின்சாரசக்தி பெறுவதற்கு உபயோகப்படும் நீர்நிலையங்கள், மாவரைக்கும் இயந்திரங்களை இயக்குவதற்கு உபயோகமாகும் நீர்நிலைகள், கால்வாய்களாகவும், நீர்விளையாட்டுத் தொட்டிகள் சுனைகளாகவும் உதவுகின்ற நீர்நிலைகள், நந்தவனங்களிலும் தோட்டங்களிலும் நீர்வீசு பந்துகளாகவும் விசிறிகளாகவும் உபயோகிக்கப்படும் நீர்நிலைகள். வர்த்தகப் பாதைகளாக உபயோகிக்கப்படும் வாவிகள், ஆறுகள், குளங்கள் — இவைகளைப் பகுத்துப் படத்திற் காட்டுக.

25. குடிப்பதற்கும், குளிப்பதற்கும், மற்று வீட்டுக் கருமங்கட்கும், உபயோகப்படும் நீர், மேற்சொல்லப்பட்ட நீர்நிலைகள், கிணறுகள், வாவிகள் முதலியவைகளிலிருந்து பெறப்படாவிடின் வேறு எவ்விதம் பெறப்படுகின்றது? நீர்த்தொட்டிகள் உண்டேல் அவைகளைப் படத்திற் காட்டுக.

26. ஆறுகள், அருவிகள் ஆகிய நீர்நிலையங்களைக் கொண்ட உமது படத்தை சமஉயரக் கோடுகளைக் கொண்ட படத்தோடு ஒத்துப்பார்த்து மேற்படி நீர்நிலையங்கள் எங்ஙனம் பள்ளத்தாக்குகளோடும், பள்ளங்களோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனி.

27. பகுதி புதிதாக ஆக்கப்பட்டதாயிருப்பின், அருவிகள் முதலிய நீர்நிலையங்களிற் சில மூடுண்டிருக்கும், அல்லது "நீர்வடிகள" (Drains) வழியே சென்றுகொண்டிருக்கும். இவ்வித மாற்றங்கள் எங்கு ஏற்பட்டிருக்கின்றன? ஒரு பழைய தரை விவரப் படத்தைக் கொண்டு இவைகளைக் கண்டறிக.

(தொடர்ச்சி 269-ம் பக்கம் பார்க்க)

# ஒன்றும் வைக்க வேண்டாம்

— "ச. மு." —

அன்னபூரணத்தை அறியாதோர் யாருமில்லை. செல்வத்திலேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்து, செல்வத்தையே அனுபவித்த ஒரு பெண். கல்வியில்லாத போதினிலும் பொருட் செல்வத்துக்கும் பிள்ளைப் பாக்கியத்துக்கும் குறைவில்லை.

"கைப் பொருளொன் றுண்டானல் ............."
என்றபடி இனத்தார் சனத்தார் சுற்றத்தார் எல்லோரும் ஒன்றுகூடிக் களித்தனர். நாட்கள் செல்லச் செல்ல இன சனபந்துக்களும் குலையத்தொடங்கினர். ஏனெனில் கண்டோர் நின்றோர் யாவரும் ஐந்துரூபா பத்துரூபா வென்று கடன் கேட்க ஆரம்பித்தனர். அன்னபூரணத்துக்கு இவர்கள் சகவாசம் வேம்பாயிருந்தது. கையிலிருந்த பணத்தையும் ஈட்டுக்கு வட்டிக்குக் கொடுத்துச் சிந்திச் சிதறிவிட்டாள். ஒரு ஆபத்து அந்தரமென்று காசு புரட்ட முடியவில்லை. பேராளவிலே சொத்துக்காரி. பிள்ளைகளுடைய விவாகங்களிலும் அதிகம் செலவானது. ஏதோ காரணம் தெரியாது பின்னடியில் தாயும் பிள்ளைகளும் கீரியும் பாம்பும் ஆகவே, அன்னபூரணம் பிள்ளையும் வேண்டாம் குட்டியும் வேண்டாம் கண்ணுக் கெட்டாத் தூரத்திலேயிருந்து ஒரு பலாவிலை கஞ்சி குடித்தால் போதுமென்று ஒரு வீடு வாடகைக்கெடுத்திருந்தாள். ஓய்ந்த நேரங்களில் பொழுதுபோக்குக்காகப் பலரும் சென்று அன்னபூரணத்தின் அக்கிராசனத்தின் கீழ் வம்பர் மகாசபை கூடுவது வழக்கம். அல்லாமலும் இடையிடையே காய் பிஞ்சுக்காரி, கோழி முட்டைக்காரி, என்ற பல வியாபாரிகளும் வீடு செல்வது சர்வசாதாரணம். புதன்கிழமை அடைமழை. அன்னபூரணத்தின் மருமகன் காலஞ்சென்றதென்று துற்செய்தி கிடைத்தது. உடனே கதவுகளெல்லாம் பூட்டிக்கொண்டு வெளிக்கதவில் ஒரு துண்டு எழுதிக் கட்டிவிட்டுச் சென்றுள். எழுதியது பின்வருமாறு "இங்கு ஒருவரும் இல்லை. தயவு செய்து ஒன்றும் வைக்கவேண்டாம்." இதை வாசித்த யாரோ அவள் கதவை உடைத்து அங்குள்ள விலை உயர்ந்த நகைநட்டு, உடுபுடவைகள் இன்னும் கண்ணைக் கவரும் பல பொருட்களையும் எடுத்துச் சென்றனர்.

சில நாட்களுக்குப் பின் அவள் வீடுவந்து பார்த்ததும் தான் எழுதிக் கட்டின துண்டின் கீழ் "நாங்கள் அதிகம் வைக்கவில்லை. பெரிய உபகாரம்" என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டாள். கள்வர் யாரோ அவள் நன்மையைக் கோரிப் போலும் அங்குள்ள முழுவதையும் எடுக்காது சிலவற்றை விட்டுச் சென்றனர்.

# காதலின் மகிமை

"காளி புத்திரன்"

தலைவி, தலைவன் வீட்டிலிருந்து தாய்வீடு வந்திருக்கின்றுள். நெடுநாட்களுக்குப்பின் வந்த தன் தலைவியைக் கண்டு தோழிக்கு ஆற்றொணு உவகை உண்டாகின்றது. தலைவிபுகுந்த நாட்டுச் சீரையும், அவள் வாழ்க்கையையும் அறிய ஆசைகொண்ட தோழி; "அம்மே! நீ சென்ற நாடு எவ்வியல்பிற்று?" என்று ஒரு கேள்வியைத் தலைவியிடம் கேட்கின்றுள். அதற்குத் தலைவி பதில் கூறுகின்றுள் :–

"அன்னாய்! வாழி வேண்டன்னை நம்படப்பைத்
தேன்மயங்கு பாலினுமினிய வவர்நாட்
டுவலைக் கூவற்கீழ்
மானுண் டெஞ்சிய கலிழிநீரே-" (கபிலர்)

"அன்னையே! வாழ்வாயாக! நான் சொல்லும் இதனை விரும்பிக் கேள்! அன்னை! நம் மலையிலுள்ள இருலினின்றும் பிழிந்தெடுத்த தேன்கலந்த பாலைவிட, நம் தலைவர் நாட்டில் தழைகள் விழுந்து அழுகிக்கிடக்கும் சிறு குழிகளில் மிருகங்களால் உண்ணப்பட்டு மிஞ்சியிருக்கும் கலங்கிய சின்னீர் எனக்கு இனிமையாகயிருக்கின்றது."

'தலைவனது நாடு எத்தகையதாயிருந்தாலும் அஃதே எனக்கு விருப்பமாயிருக்கும்.' என்பதைக் கூறப்போந்த தலைவி அக்கருத்தை எவ்வளவு அழகாகவும் பொருட் செறிவோடும் எடுத்துக் கூறியிருக்கின்றனள் பாருங்கள்!

நான்கு அடிகொண்ட இச்சிறு பாட்டில் பற்பல அரிய கருத்துகள் பொதிந்து விளங்குவது கற்றோர்க்கு களிபேருவகை கொடுப்பதாம். தலைவனது நாட்டில் தழைகள் அழுகிக்கிடக்கும் சேற்றிடத்தில் விலங்குகள் உண்ணக் கலங்கிய சிறியநீர் தலைவிக்கு தன்மலையில் இருலினின்றும் பிழிந்தெடுத்த தேன்கலந்த பாலைவிட இனிமையாயிருப்பதாகத் தோன்றுகிறதாம். தன் மலையில் தேன் விளைவதாகத் தலைவி இங்கு பெருமை பாராட்டிக்கொள்கிறுள். தலைவனது நாட்டில் மரங்கள் செறிந்திருக்கிறதென்றும், அங்கு மாதம் மும்மாரி பெய்கிறதென்றும், பல மிருகங்கள் அங்கு வசித்துவருவதாகவும் தலைவி வியந்தோதுகின்றுள். மிருகங்கள் வாழ்ந்து வரினும் தன் தலைவன் தன்னை அதினின்றும் காப்பாற்றும் வீரமுடையன் என்று அவள் நயம்பட எடுத்தோதுவது சிந்திக்கற்பாலது.

காதலின் மகிமையே மகிமை!

---

**ஈழகேசரி கல்வி அனுபந்தம்**
தனிப்பிரதி விலை சதம் -- 3
25 பிரதிகள் விலை சதம் —.50
தபாற் செலவு வேறு
ஆண்டுச் சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

## இடப் பூமிசாஸ்திரம் படிப்பித்தல்

(267-ம் பக்கத் தொடர்ச்சி)

### V

### வாயுநிலை

28. வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி, வருடாந்த சராசரி வெப்பநிலை—இவைகளைக் காட்டும் கோட்டுப் படங்களை (Graphs) வரைக. பாடசாலை, வாயு நூற்சாலையிலேயே மேலே கொடுக்கப்பட்ட "புள்ளி விவரங்களைப்" பெறல்வேண்டும். வாயுநூற்சாலை பாடசாலையிலில்லாவிட்டால் தேவையான "புள்ளிவிவரங்களை" கோட்டை, கச்சேரி, பிரதான வைத்தியசாலை இவ்விடங்களிலிருந்து பெறலாம்.

29. காற்றின் திசைகாட்டுங் கருவி ஒன்று செய்து தினமும் காற்றுத்திசையை ஓர் அட்டவணையில் பதித்துவருக. "மழை அளவி" ஒன்று செய்து அதனைக்கொண்டு மழை வீழ்ச்சியை அளந்து, அட்டவணைப்படுத்திவருக. சேர்த்தெடுத்த புள்ளி விபரங்களைக் கொண்டு கார்காலம், கோடைகாலம், கூதிர் காலம் ஆகிய காலங்களின் வெப்பநிலை, மழைவீழ்ச்சி, பனி முதலியவற்றை ஊகித்தறிக.

30. ஊகித்தறிந்த முடிபுகளை எழுதிவைக்கவும், வெயில் அளவுக் கருவி உண்டேல், அதன் உதவியால் வெயில் அளவு விபரங்களைப் பெற்றுக்கொள்க. இன்றேல் சமீபத்திலுள்ள வாயுநூற்சாலையிலிருந்து வேண்டிய புள்ளி விவரங்களைப் பெற்றுக் கோட்டுப்படங்களை வரைக.

### VI

### ஆக்கத்தொழில்கள் (Industries)

31. பகுதியிலுள்ள ஆக்கத் தொழில்களை ஒரு படத்தில் காட்டுக. இப்படத்தை ஏற்கெனவே வரையப்பட்ட படங்களோடு ஒத்துப் பார்க்குக. வெவ்வேறு ஆக்கத் தொழிற்பகுதிகளை வெவ்வேறு நிறங்களால் அடையாளப்படுத்துக.

உ-ம்; உணவுப்பொருட்கள், நெசவுத் தொழில், மின்சாரத்தொழில், சட்டி பானை செய்தல், பித்தளை வெண்கல வேலை, பாயிழைத்தல்.

32. இவ்வாக்கத் தொழில்களின் அமைப்பு, பெர்பாதை, புகையிரதப்பாதை, துறைமுகம் முதலிய போக்குவரவுச் சாதனங்களோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறது?

33. பிரதான வியாபார ஸ்தானங்களைக் காட்டும் ஒருபடம் வரைக.

### VII

### போக்குவரவுச் சாதனம்

34. பிரதான பேர்பாதைகள், புகைரதப் பாதைகள், நிலக்கீழ்ப் பாதைகள், நீர்வழிகள், அடைப்பறைகள், துறைமுகங்கள், விமானப் போக்குவரவு ஏற்பாடுகள் இவைகளைக் காட்டும், ஓர் படம் வரைக. மோட்டோர்ப்பாதை, டிறும்வண்டிப் பாதை, மோட்டோர் வண்டி முதலியன நிறுத்தப்படும் ஸ்தாபனங்கள்—இவைகளையும் மேற்படி படத்திற் காட்டுக. இப்பாதைகளின் வழியே சென்றுகொண்டிருக்கும் மோட்டோர் வண்டிகள், லொறிகள், புகையிரதங்கள், மாட்டுவண்டிகள், பைசிக்கிள்கள், குதிரைவண்டிகள், பொதிமாடுகள் இவைகளின் தொகை நாளுக்கு இத்தனை என்பதை அறிக.

35. பகுதியிலிருக்கும் இடங்களுக்குள்ள இடைத்தூரம், ஓரிடம்விட்டு வேறோரிடத்துக்கு வெவ்வேறு சாதனங்களின்வழியே செல்வதற்கு வேண்டிய நேரம், பணம்—இவைகளை அட்டவணைப்படுத்துக.

### VIII

### சனசமூக வாழ்க்கை

36. நாட்டாண்மைக் கழகத்தார் இருப்பிடம், ஆட்சிக்கந்தோர், பிரசித்த கட்டிடங்கள், பாடசாலைகள், நகரபரிபாலனப் பிரிவுகள், கிராமசங்க ஆட்சிப் பிரிவுகள்—இவைகளை ஒரு படத்திற் காட்டுக.

37. சனங்கள் குடியிருக்கும் பகுதிகள், அவைகளின் தொழிற் பிரிவுகள்—வேளாண்மரபினர் பிரிவு, வண்ணார்பிரிவு, கடைப்பிரிவு, ஆலை வேலைக்காரர் பிரிவு, மீன்பிடிகாரர் பிரிவு, தட்டார்பிரிவு, கம்மாளர்பிரிவு, கைக்கோளர் பிரிவு—இவைகளை ஓர் படத்திற் காட்டுக.

## சர்வகலாசாலையும் ஆராய்ச்சியும்

(265-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணம் யாது? சென்ற இருபதுவருட காலமாக உலகமெங்கும் கல்வியதிகார சபைகள் ஏற்படுத்தப்பட்டுக் கல்வி முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இலங்கையில்மாத்திரம் கல்விமுறை திருத்தமடையாது இருந்து வருகின்றது. இந்நிலைமைக்குக் காரணம் இலங்கையர்கள் தங்கள் கல்வி விஷயத்தில் விழிப்படையாமையே. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணம் அந்நாட்டின் கல்வி முறையாகும். ஆகையால் கல்விமுறை கால தேசங்களுக்கேற்பத் திருத்தமடைந்து வரவேண்டும். நமது நாட்டுக் கல்வி இன்னும் அந்நியபாஷையில் நடைபெற்று வருவது அவமானமாகும். நமக்குவேண்டிய கல்வியை நமது பாஷையிற் பெறுவதே கல்வியின் நோக்கமாக விருக்கவேண்டும். கல்வியதிகார சபையும் மேற்கூறிய திருத்தத்தைக் கொண்டுவரும் நோக்கமுள்ளதாக விருக்கவேண்டும். அன்றேல் பிரயோசனமில்லை.

பஞ்சப் பொறியையுயி ரென்னும்அந்தப் பஞ்சமறச், செஞ்சேவே யெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ.

# ஏது முந்தியது?

ஒரு பட்டினத்தில் ஓர் தனவந்தனுக்கு ஒரு புத்திரன் அவதரித்தான். அவன் பட்டினத்திலுள்ள சர்வகலாசாலையிற் கல்விபயின்று வந்தான். இளமை தொடங்கி அவன் கடவுட் பக்திக்குரிய காரியங்களைக் கற்க மனமற்றவனாய் வானசாஸ்திரம், பூமிசாஸ்திரம் முதலிய இயற்கை சாஸ்திர வித்தைகளைக் கற்று உலகந் தானாக உண்டானதென்றும், இவைகளை உண்டாக்க ஒரு கடவுள் இல்லையென்றும் தீர்மானித்து நாஸ்திகக் கொள்கையை உடையவனாக இருந்தான். கலாசாலை விடுமுறை நாட்களில் அவன் வீட்டுக்குப் போவது வழக்கம். அவ்வேளையில் இவனைப் பக்கத்து வீட்டுச் சினேகிதனொருவன் விருந்துக்கழைத்தான். அச் சினேகிதனின் அன்னை அங்கே கடவுட் பக்திக்குரிய தோத்திரங்களைப் பாடிக்கொண்டிருந்தாள். அச்சிறுவன் அவளைப் பார்த்து, அம்மா! "உனக்கு வேறு முயற்சி இல்லையா? ஏன் வீண் நேரம் போக்குகிறாய்? கடவுளும் ஒருவர் உளரா?" என்றான். அதற்கு அம்மாது, "தம்பி! உனக்குக் கடவுளொருவர் உண்டென்றும் அவர் சகலத்தையும் உண்டாக்கினாரென்றும் நம்பிக்கையில்லையா" என்று கேட்டாள். அதற்குச் சிறுவன் "இல்லையே இல்லை; எல்லாந் தானாயுண்டாயிற்று" என்றான். இதைக் கேட்ட பெண்மணி, 'இதோ இங்கிருக்குங் கோழி எங்கிருந்து வந்த'தென்றாள். அவன் பரிகசித்து 'சபாஷ்! அம்மா! இவ்வளவு பெருங் கேள்வியா நீ என்னைக் கேட்கத் துணிந்தாய்! கோழிமுட்டை கோழியினிடத்திருந்து வந்ததென்று தெரியாதா?' என்றான். அதற்கு அவள், 'கோழி எங்கேயிருந்து வந்தது?' என்றாள். அதைக் கேட்ட அவன் முட்டையிலிருந்து கோழி வந்தது' என்றான். உடனே அவள் நகைத்துக் கோழியோ முட்டையோ முந்தி உண்டாயிற்று என்றாள். அவன் பசபசவென்று விழித்து, அம்மா, கோழிதான் முன்னேயுண்டாயிற்று என்றான். அதற்கு அவள் "முட்டையிலிருந்து வெளிப்படாத கோழி ஆதியில் இருந்ததென்று கொள்ளுகிறாயா" என்றாள். அதைக் கேட்ட சிறுவன் சற்று யோசித்து முட்டைதான் முன்னே உண்டாயிற்றென்றான். பெண்திலகம் கையோடு கையைத் தட்டி நகைத்து தம்பி! கோழியிடாத முட்டை ஆதியில் இருந்ததென்று நீ ஒப்புக்கொள்ளுகிறாயா?" என்றாள். சிறுவன் ஒன்றும் பேச வகையறியாது பல்லைக் கடித்துக்கொண்டு, கோபித்து நின்றான். அப்போது பெண்ணணங்கு, 'அற்ப பிராணியாகிய கோழியும், முட்டையும் உண்டான விதத்தைச் சொல்ல வகையறியாத நீ, உலகத்திலேயுள்ள யாவும் தானாய் உண்டானதென்று சொல்லத் துணிந்தது மிகவும் வியப்பாயிருக்கின்றது; அதை நிச்சயமாகக் கூற எந்தச் சாஸ்திரங்களாலும் முடியாது' என்றாள். ஆனால் கோழியை யாவது முட்டையை யாவது ஆதியிலுண்டாக்கின கடவுள் இருத்தல் வேண்டுமென்று ஆஸ்திகர் நிச்சயிக்கின்றனர். இவைகள் சர்வ வல்லமையுள்ள கடவுளையும் அவருடைய எண்ணில்லாத இலக்ஷணங்களையும் காண்பிக்கின்றன என்று தெய்வ நம்பிக்கையும் பக்தியும் பெற்றிருக்கிறவனே அறிவான். ஆகையால் என்னிலும் நீ கடவுளில் அதிக விசுவாசமுள்ளவனாயிருத்தல் வேண்டுமென்றாள். அச்சிறுவன் கல்விக் கணிகலமாகிய நடுவு நிலைமையுள்ளவனானபடியினால் உண்மையை யறிந்து அன்று முதல் கல்விச் செருக்கை அறவே அகற்றி, நாளடைவில் சமயநூல்களை வாசித்து வெகு சீக்கிரத்தில் தெய்வ நம்பிக்கை எய்தப் பெற்றான்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்."

V. S. சர்மா (261)
உடுவில் தெற்குச் சைவ வித்தியாசாலை.

விண்ணப்பப் பத்திரம்

திகதி............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [ இந்தியா 2 அணா; மலாயா 16 காசு. ]

பெயர்..............................................................

பிறந்த திகதி..................மாதம்......................வருடம்.......................

விலாசம்..............................................................

..............................................................

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் ..............................................

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[ குறிப்பு: இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது ]

# குடிவெறி

குடிவெறியானது கள், சாராயம் முதலிய மயக்குப் பதார்த்தங்களைப் பருகுவதாலுண்டாகும் மயக்கம். அவ்வெறி தலைக்கேறுமானால் சுயபுத்தி மயங்கும். மயங்கவே ஒருவன் தான் செய்வது இன்னது என்றும், பேசுவது இன்னது என்றும் அறியான்.

மடிபிடி; தடியடியெல்லாம் கெடுமதி கொண்ட குடிவெறியாலே வரும். அவமானம், நிருவாணமெல்லாம் மதியீனங்கொண்ட மதுபானத்தாலே வரும். குடிகாரனுக்குச் சீரழிவு; அவன் மனைவிமக்களுக்குப் பேரழிவு; உற்றார் அயலார் ஊரழிவென்பர். இதைவிடப் பேரழிவு வேறென்ன?

குடிகாரன் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு. அவன் காராள வமிசத்துச் சீராளனாயிருந்தாலும், வெட்டியானிலுங் கெட்ட தொட்டியான் எனப்படுவான். "தோண்டிக் கள்ளைத் தொடர்ந்து குடித்தாற் பாண்டியன் மகனும் பறையனாவான்." "சாராயத்தினைத்தான் தினங்குடித்தாற் காராளனுமே கடைமகனாவான்." குடிகாரனைத் தன் சாதியான், சனத்தான் என்று கூச்சமின்றிச் சொல்ல ஆருக்குப் பிரியமிருக்கும். கல்லாத மடையன் குலநலம் பேசினாலும், கட்குடியன் குலநலம் பேசுதலும் பாரம்பரியம் பாராட்டலும் நிந்தைக்கிடம். குடியனுக்கு குலமென்ன? நலமென்ன? மேன்மக்கள் பந்தி போசனத்துக்கடார்கள். அவமானம் தானாகவே உண்டாகும். குடியனுக்குச் சிநேகிதர்கள் கீழ்மக்களே.

எந்தக் குடியனுடைய குடித்தனம் உருப்பட்டிருக்கிறது. பெண்டிர் பிள்ளைகள் போசனத்துக்கு வழியில்லாது, நித்தமும் கண்ணீரும் கம்பலையுடனுமிருக்க, அவரும் சிநேகிதருமாக நன்றாகக் குடித்துத் திரிகிறார்கள். குடித்ததும் பற்றாமல் அம்முரட்டுச் சாமிகள் தங்கள் வெறிக்குணத்தை அப்பாவிகளாகிய பெண்சாதி பிள்ளைகளுக்கு உபயோகிக்கின்றார்கள். அந்தோ! குத்தும், அடியும், உதையும் எவ்வளவு காலமாகப் பொறுத்துச் சகிப்பார்கள். குடியனுக்கு இருக்க வீடோ, குடிக்கக் கஞ்சியோ, படுக்கப் பாயோ ஒன்றுங் கிடையாது. இருக்கிற வீடு ஈடு; உடுக்கிற சீலை இரவல்; குடியனுக்கு குடியினால் வரும் அவமானம் பிறர் கொடையினால் வரும் வெகுமானம் போலிருக்கும்.

தற்போது மதுக்கடைகள் தொகையில் அதிகரித்து வர, குடிகாரரும் அதிகரித்தே வருகிறார்கள். மதுக்கடையில் மூன்று நாலுபேர் கூட்டமாய்ச் சேர்ந்தவுடன் அவர்களுக்குள் பெரும்போட்டி உண்டாகிவிடும். முன்பும் கள்குடித்துவிட்டுப் பின்னும் 'மச்சான்! யார்பாப்பம் கூட முட்டிகள் குடிக்கிறது.' என்று வாதமுண்டாக மேலும் மேலும் கள் பருகி மயக்கத்துள் ஆளாவார்கள். அந்தோ இவ்வித பசப்பு வார்த்தையும், வீரமும், குடியும் மோட்சமடையச் செய்யுமா?


## தமிழ் மஞ்சரி

(முதலாம் பாகம்)

[வித்தியாசாலைகளின் உபயோகத்திற்குரிய தேனப் பரீக்ஷா புத்தக சபையாரால் **3-3-36** ல் அங்கீகரிக்கப்பட்டது]

இந்நூல் செய்யுட்பாகம் வசனபாகமென இரு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட்பாகத்தில் தேசாபிமானம் பாஷாபிமானம் இலக்கியச் சுவை சொல்விற்பத்தி நீதி என்னுமிவற்றை விளக்கக்கூடிய இனிமையான செய்யுள்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வசனபாகத்தில் தெளிவான நடையில் இதற்காக எழுதப்பட்ட சிறந்த உரைநடைப் பாடங்கள் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஆறும் வகுப்புக்குரிய இலக்கிய பாடமாகப் பல பாடசாலைகளில் உபயோகித்து வருகிறார்கள்.

**விலை சதம் 50**

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.


அநேக குடிகாரர் வைத்தியசாஸ்திரம் பேச அறிவார்கள். எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட ஒரேயொரு ஔடதமுண்டு. விஷபேதிக்கு மருந்து சாராயம். அசீரணத்துக்கு மருந்து சாராயம். குத்துக்கு, வயிற்றுளைவுக்கு மருந்து சாராயம். சூட்டுக்குமதுவே மருந்து. சுரத்துக்குமதுவே மருந்து. எல்லாவற்றிற்குமதுவே மருந்து. குடிகாரன் பார்த்த வாகடமுறையை அவன் வீட்டாரும் அனுட்டிக்கத் தொடங்கி, வாழையடி வாழையாய் வமிச பரம்பரையாய் இந்த ஔடதத்தையே உபயோகிப்பார்கள். குடியனுடைய பிள்ளை, பேரப்பிள்ளை ஒருவேளை குடியாவிட்டாலும், அடுத்த தலைமுறையிலாவது பரவணித்தாகத் தொடங்காதிரா. தர்ச்சகவார்த்தையும் குடிக்கொரு காரணம்.

இவ்வித கெடுதிகள் காரணமாகவல்லவா நம்மூதாக்கள் கள்ளுண்டலைப் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகத் தீர்மானித்தார்கள். மதுபானத்தைச சிறிதும் பாவியாத தலைமுறை யாருக்கெவ்வளவு மகிமை. அவர்களே யோக்கியர். அவர்களே சாதிமான்கள் எனத்தக்கவர்கள். மகமது சமயானுசாரிகள் இவ்விஷயத்தில் மனவுறுதி கொண்ட மகான்களும் யோக்கியருமெனப் புகழக்கூடிய மேன்மக்கள் என்பதும் சொல்லவும்வேண்டியதில்லை. நமது சைவசமயானுசாரிகள் தீபாவளிக் கொண்டாட்ட நாட்களிலும் தாம் வேண்டியவாறு இதற்கென்று குடிப்பார்கள். இதனாற் சுகமென்று நம்பி, எங்கள் புண்ணிய தினங்களைப் பாழாக்குகின்றார்கள். இக்குடியாட்களைக் கண்ணாற் பார்க்கவும்கூடாது.


பூ. க. சின்னத்துரை, (ச. எ. **263**)
உடுவில் தெற்கு, சைவவித்தியாசாலை.


முக்குணத்தைச் சிவனென்றும் மூடத்தை விட்டருளால், அக்கணமே யெம்மை அறிந்துகொள்வ தெந்நாளோ.

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

அன்பார்ந்த குழந்தைகாள் !

கட்டுக்கட்டாய்க் கடிதங்களும் கட்டுரைகளுமாயிருக்கின்றன! என்மேசை நிரம்பிவிட்டது. இவைகளையெல்லாம் நான் எப்படிப் பார்த்துக் கழிப்பது என்று தெரியாது முழிக்கவேண்டியிருக்கிறது! எல்லாரும் தங்கள் கட்டுரைகளைக் "கட்டாயம் அடுத்தவாரத்தில் பிரசுரிக்கவேண்டும்" என்று 'கட்டளை'யிடுகிறார்கள்? பேரப்பிள்ளைகளே, அதற்குப் பத்திரிகையும் இடங்கொடுக்கவேண்டுமே!

கட்டுரைகளையெல்லாம் பார்க்கும்போது அவைகளில் நிரம்பிக் கிடக்கும் பிழைகளும் மாறுபாடுகளும் என் மூளையைக் குழப்பி விடுகின்றன. பிரசுரத்துக்கு எடுப்பதற்கு நான் எத்தனையோ வெட்டுக் கொத்துகள் செய்யவேண்டியிருக்கிறது. இருந்தும் ஒரு சிலவே பிரசுரத்துக்கு ஏற்றதாயிருக்கின்றன. ஆகையால் உங்கள் கட்டுரைகளில் கிடக்கும் பிழைகளை எடுத்துக்காட்டி இனிமேல் திருத்திக்கொள்ளத்தக்கதாக நான் இவ்வாரம் சிலவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

—தாத்தா

தாத்தா பதில்

மு. க. சின்னத்துரை: உமது கட்டுரையில் வெறும் சொல்லடுக்கைக் கவனித்திருக்கிறீரே யல்லாமல் பொருளைக் கவனிக்கவில்லை. கைம் பெண் என்றால் புருஷனை இழந்தவள் என்று பொருள். எனவே உயிரோடிருக்கு மொருவனுக்கு அவன் மனைவி கைம் பெண்ணாவது எப்படி? பிள்ளைகள் அநாதைகள் எப்படி? கட்டுரையில் பிழை ஒரு தொகை.

சர்மா (261) நல்லமுறையிலிருக்கிறது. இந்த அளவில் தான் எழுதிப்பழகுதல் வேண்டும்.

ஆ. நமசிவாயம் (256) உமது முகவுரை அவசியமற்றது. 'கற்பனை' என்ற சொல் தவறான பிரயோகம். 'படிப்பினை' என்று நினைத்திருக்கிறீர் 'மிச்சம் கவனம்' என்ற பிரயோகம் கட்டுரையின் நடைக்குக் கஞ்சிக்குப் பயறு போட்டது மாதிரியிருக்கிறது. கதையின் கருப்பொருள் நன்றாயில்லை.

க. சுப்பிரமணியம் (253) கடதாசியின் ஒரு பக்கத்தில் தான் எழுதவேண்டும். 'ரோ'—இது என்ன எழுத்து? 'இதுவுமா கௌரவம்' என்ற கட்டுரையில் உமது கொள்கையை நீரே மறுத்து விட்டீர்!.........by.........இந்த மறதியேன்? இனி உமது கையெழுத்தும் ஆங்கிலத்திலா?

போ. கனகையா: உமது விஷயத்தைப்பற்றி அடுத்தவாரம்.

மா. குகராசா: (199) கதை நன்றாயிருக்கிறது. அடுத்த வாரம் பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அ. ஜயேந்திரன்: எல்லாருக்கும் உகந்ததான போட்டிகள் தான் வரும். அப்பா அம்மாவுக்கு எனது வந்தனத்தைத் தெரிவிக்கவும். மகேந்திரன் ஏன் கடிதமெழுதவில்லை?

சி. அரசரத்தினம்: (180) உம்முடைய விலாசத்தைப் பிறர் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கே பதில் எழுதலாம்.

சீ. நடராசா: (259) கடிதம் எழுதும் மாதிரி உங்கள் ஆசிரியரிடம் (நான் சொன்னதாக) கேட்டறிந்து கொள்ளவும். நீர் கேட்ட விலாசம்: செ. சீவரத்தினம், அ. மி. பாடசாலை, வேலணை.

மு. கந்தசாமி, (230). அந்தக் கட்டுரை கிடைக்கவில்லை. சி அரசரத்தினத்தின் விலாசம்: உடுவில் தெற்கு சைவவித்தியாசாலை, மானிப்பாய்.

சண்முகம், (223) நல்ல சுகம். உமது பிறந்ததினம் கழிந்துவிட்டது. இருந்தாலும், எனது ஆசீர்வாதங்களைப் பெறக்கடவீர்.

அ. இந்திரவதி, ஒவ்வொருமுறையும் உமது கடிதம் வெகு உற்சாகமாகத்தான் இருக்கிறது. என்ன, பாட்டி சொல்லித்தான் நான் உமது கட்டுரையைக் கல்வி மலரில் பிரசுரித்தேனா? சரி, சரி, என்மீது நம்பிக்கையில்லைத்தானே! 24 மணித்தியாலத்துக்குக் 'கோபம்'! என்னோடு பேசக்கூடாது. நீர் கேட்டவர் விலாசம் அப்புறம் ரகஸ்யமாய்த்தான் சொல்ல வேண்டும். பத்திரிகையில் பிரசுரிக்கலாகாது....... சரி, 'கோபம்'!

க. சுப்பிரமணியம், பழைய கட்டுரைகள் நன்றாயில்லை. வேறு எழுதினால் நல்லது.

ந. இ. இரத்தினம். இத்தனை விலாசமுமா வேண்டும்? 180, 203, 259, 261 — உடுவில் தெற்குச் சைவ வித்தியாசாலை, மானிப்பாய். 235, 239, — அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி. 270, 271, 272, 273, 274, 275, 276 — சரவணபவானந்த வித்தியாசாலை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

அமிர்தவல்லி, உமது கடிதத்தை இந்திரவதி எதிர்பார்க்கிறார்.

[அங்கத்தவர்கள் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். பழைய முத்திரைகள் வைத்திருப்போர் தங்கள் விலாசத்தைத் தெரிவிக்கலாம்.]

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" த்தி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டிய்' லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஆண்டு ஜூன் மீ 25உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.